**வேலையிடத்தில் பாகுபாடு காட்டுதல்**

## நிரந்தரமற்ற மற்றும் தற்காலிக ஊழியர்கள்

ஒன்டேரியோ *மனித உரிமை சட்டத்தொகுப்பின்* கீழ், இனம், பூர்வீகம், பிறப்பிடம், நிறம், மனிதஇன சேர்க்கை, குடியுரிமை, மத நம்பிக்கை, பாலினம், பாலின திசைபாடு, ஊனம், வயது, மணமான நிலை, குடும்ப அந்தஸ்து மற்றும் சட்டம் ஒழுக்கம் மீறிய பதிவுக்குறிப்பு போன்றவையினால் பாகுபாடு இன்றி ஒவ்வொரு மனிதருக்கும் வேலைவாய்ப்பில் சமமாக நடத்துதலுக்கு உரிமை உண்டு.

**உங்களுக்கு பாதுகாப்பு உண்டா?**

மனித உரிமை சட்டத்தொகுப்பின் கீழ் உங்களுக்கு பாகுபாடோ அல்லது உபத்திரவமோ இல்லாமல் வேலைபுரிய உரிமையுண்டு. நீங்கள் நிரந்தரமற்ற, பகுதிநேர, தற்காலிக, அல்லது நிரந்தரமற்ற ஏஜென்ஸி ஊழியர், ஒப்பந்த ஊழியர், சுயேட்சையான ஒப்பந்த ஊழியர் அல்லது ஒரு சம்பளமில்லா தொண்டராகவே இருந்தாலும்கூட ஒரு மாற்றமும் இல்லை. நீங்கள் வேலைபுரியும் பொழுது உங்களுக்கு எதிராக பாகுபாடோ அல்லது உபத்திரவமோ இருக்கக்கூடாது. உங்களை சுயதொழிலாளி என்ற பெயரில் வேலை அமர்த்துபவர்கள் தங்கள் மனித உரிமை கடமைப்பாடுகளை தவிர்க்கமுடியாது. இந்த *சட்டத்தொகுப்பு எம்ப்ளாய்மென்ட் ஸ்டான்டர்டஸ் ஆக்ட்* போன்ற மற்ற சட்டங்களின் கீழ் "ஊழியர்" என்று கருதப்படாத மக்களை பார்த்துக்கொள்கிறது.

**சாதாரண வேலை நேரங்களுக்கு அப்பால் பாதுகாப்பு**

*சட்டத்தொகுப்பில்* உள்ள பாதுகாப்புகள் ஊழியர்களுக்கு சாதாரண வேலை நேரங்களுக்கு அப்பாலும் மற்றும் அவர்கள் வேலையிடத்தில் இல்லாதபோதும் பொருந்தும். உதாரணமாக, வேலைக்கு வெளியே ஒரு மாலை சந்திப்புக்கு பிறகு உங்கள் மேலாளரால் நீங்கள் பாலினரீதியாக உபத்திரபட்டால், நீங்கள் இன்னும் பாதுகாக்கப்படுகிறீர்கள்.

**வீட்டு வேலையாட்கள்**

ஒருவரின் வீட்டிலோ வெளியிலோ தாதி, சமையல்காரர், சுத்தம்செய்பவர் அல்லது தோட்டக்காரன் போன்று வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களும் இந்த *சட்டத்தொகுப்பால்* பாதுகாக்கப்படுகிறார்கள்.

**வேலையிலிருக்கும் காலம் மற்றும் வேலையில் அமர்த்தும் முறை**

இந்த *சட்டத்தொகுப்பு* எத்தனை நீண்ட காலம் ஒரு நிறுவனத்தில் வேலைபுரிந்தீர்கள் அல்லது எவ்வித வேலைபுரிந்தீர்கள் என்று பொருட்படுத்தாமல் நிரந்தரமற்ற மற்றும் தற்காலிக ஊழியர்களையும் பார்த்துக்கொள்கிறது. உதாரணமாக, நீங்கள் ஐந்து நாட்கள் மட்டுமே ஒரு கட்டிடத்தை சுத்தம் செய்ய வேலைக் கொடுக்கப்பட்டீர் என்றாலும், உங்கள் மனித உறிமைகள் கட்டு மீறப்பட்டால், நீங்கள் இந்த *சட்டத்தொகுப்பால்* பாதுகாக்கப்படுகிறீர்கள். நீங்கள் நிரந்தரமற்ற பதவியிலிருந்த நிரந்தரமான பதவிக்கு மாறும்போதும் மற்றும் வேலைக்கு அமர்த்தும் செய்முறையிலும் இந்த *சட்டத்தொகுப்பால்* பாதுகாக்கப்படுகிறீர்கள்.

**விண்ணப்பத்தால்கள் மற்றும் நேர்முக பேட்டிகளும்**

“நீங்கள் சட்டப்பூர்வமாக கனடாவில் வேலையேற்கலாமா?” என நீங்கள் கேட்கப்படலாம். ஆனால் இந்த *சட்டத்தொகுப்பில்* உள்ள தனிப்பண்புகளை சார்ந்த கெள்விகளை வேலைக்கு அமர்த்துபவர் கேட்கக்கூடாது. உங்களை வேலைக்கு அமர்த்துபவர் உங்கள் புகைப்படம், அல்லது நீங்கள் பிறந்த இடத்ததைப்பற்றிய கேள்விகள், உங்கள் இடம் பெயரும் நிலை, பிறந்த நால், உடல்ரீதியான பண்புகள், நீங்கள் எந்த “சமூகத்தை” சார்ந்தவர் என்றெல்லாமல் கேட்கக்கூடாது.

**வேலைத்தகுதி பரசோதனைக்கட்டம்**

வேலைத்தகுதி பரசோதனைக்கட்ட வேலையில்கூட உழியர்கள் பாகுபாடு மற்றும் வேலைநீக்கலிலிருந்து பாதுகாக்கப்படுகிறீர்கள். *சட்டத்தொகுப்பின்படி* வேலைக்கு அமர்த்துபவர் உங்கள் பணிகளில் உங்களுக்குள்ள விஸேஷ தேவைகளின் பெயரில் மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டியிருக்கலாம், அதாவது அந்த தேவைகள் *சட்டத்தொகுப்பு* கருதும் ஒரு உரிமையுடன் சம்மந்தப்பட்டிருந்தால்.

இந்த விஸேஷ தேவைகள் நீங்கள் ஊணமாக அல்லது ஒற்றை பெற்றோராக இருப்பதை சான்றதாக இருக்கலாம். உதாரணமாக, உங்களுக்கு காது கேட்க பலவீனமாக இருந்தால் வேலைக்கு அமர்த்துபவர் உங்களுக்கு அலுவலக தோலைப்பேசியில் பிரத்தியேக ஆம்பிளிபையர் பொருத்தவேண்டும். .

**சட்டத்தொகுப்பின்கீழ் ஒப்பந்தங்களும் பாதுகாக்கப்படுகிறது**

*சட்டத்தொகுப்பின்கீழ்* ஒப்பந்தங்களும் ஒரு பாகமாக பாதுகாக்கப்படுகிறது. ஒப்பந்தமென்பது சட்டத்தால் உள்ளடக்கப்பட்ட வாயமொழியில் அல்லது எழுதிய உடன்படிக்கையாகும். சம்பளம் அல்லது வேலை நேரம் போன்ற எந்த வேலை நிபந்தனைகளையும் உங்கள் மேலாளரிடம் கலந்துரையாடுவது ஒரு வித ஒப்பந்தமாகும். *சட்டத்தொகுப்பு* எல்லாவித ஒப்பந்தங்களையும் உள்ளடக்கும், ஒப்பந்தக்காரருடன் உள்ளவை மற்றும் கீழ்ஒப்பந்தக்காரருடன் உள்ளவையையும் சேர்த்து. *சட்டத்தொகுப்பில்* உள்ள காரணங்கள் எதனாலும் பாகுபாடு காட்டப்படாமல், சட்டப்பூர்வமாக ஒருவருடன் ஒரு ஒப்பந்தம் செய்யக்கூடிய எவருக்கும் அந்த உரிமை உண்டு,

**நான் என்ன செய்யவேண்டும்?**

- குறிப்பு எழுதுங்கள் – விவரங்கள் முக்கியமானவை
- உங்கள் மனுவிற்கு உதவக்கூடிய எழுத்தில் உள்ள ஆவணங்களை கண்டறியுங்கள் – உதாரணமாக ஒரு ஒப்பந்தத்தின் பிரதிகள் அல்லது மின்னஞ்சல் போன்றவை.
- சாட்சிகள் உண்டா? எதிராக பாகுபாடோ அல்லது உபத்திரவமோ செய்யப்படுகின்ற மற்ற யாரும் உண்டா? நீங்கள் நம்புவர்களிடம் பேசவும்.
- நீங்கள் ஒரு மேலாளரிடம் பேசியிருந்தால், அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது செய்யவில்லை என்பதை எழுதுங்கள் – அவர்களும் பொருப்பாளியாகலாம்.

**எனக்கு எங்கே உதவி கிடைக்கும்?**

**மனித உரிமைகள் சட்டம் சார்ந்த உதவி மையம்**

நீங்கள் பாகுபாடு அனுபவித்திருந்தாலோ அல்லது ஹ்யுமன் ரைட்ஸ் ட்ரைப்யூனல் ஆப் ஒன்டாரியோவுக்கு (Human Rights Tribunal of Ontario)விண்ணப்பம் தாக்கல் செய்ய இலவச சட்டரீதியான உதவி தேவைப்பட்டாலோ, அல்லது *மனித உரிமை சட்டத்தொகுப்பின்* கீழ் ஒரு பாகுபாட்டு வழக்கை தீர்க்க சட்டரீதியான ஆலோசனை தேவைப்பட்டாலோ சட்டம் சார்ந்த உதவி மையத்தை அனுகவும்.

Human Rights Legal Support Centre
(மனித உரிமைகள் சட்டம் சார்ந்த உதவி மையம்)
400 University Avenue, 7th Floor
Toronto, Ontario M7A 1X8
Tel (தொலைபேசி) : (416) 314-6266 Toll Free (கட்டணமில்லா தொலைபேசி) : 1-866—625-5179
TTY (காது கேளாதவருக்கு டேலிடைப்): (416) 314-6651
TTY Toll Free (காது கேளாதவருக்கு இலவச டேலிடைப்): 1-866 612-8627
www.hrlsc.on.ca

உங்களுக்கு ஒரு நேர்முக பேட்டி வேண்டுமென்றால், நீங்கள் எங்களை மேலுள்ள தொலைபேசி எண்களில் அழைக்கவும். நீங்கள் டோரான்டோ மாநகர வட்டாரத்திற்கு வெளியே வசித்தால், எங்களை அனுகுங்குள், உங்கள் தேவைகளை எப்படிநிறைவேற்றலாம் என கலந்தாலோசிக்கலாம். உங்களுக்கு உங்கள் சமுகத்தில் தகுந்த சேவை அளிக்க நாங்கள் எல்லா முயர்சியையும் எடுப்போம். 140க்கு மேலான மொழிகளில் நாங்கள் சேவை அளிக்கிறோம்.

---

**ஊழியர் நடவடிக்கை மையம்**

தாழ்ந்த சம்பலம் மற்றும் நிலையில்லாத வேலையில் இருப்பவரின் வாழ்க்கைகளையும் வேலை நிபந்தனைகளையும் மேம்படுத்த உறுதி கொண்டிருக்கும் அமைப்பே ஊழியர் நடவடிக்கை மையம் ஆகும். ஊழியர்களுக்கு வேலையில் ஒரு குரல் உண்டு மற்றும் அவர்கள் கண்ணியமாகவும் நியாயமாகவும் கையாலப்படுகிறார்கள் எனபதை நாங்கள் உறுதி செய்ய விரும்புகிறோம்.

Workers' Action Centre
(ஊழியர் நடவடிக்கை மையம்)
720 Spadina Avenue, Suite 223
Toronto ON M5S 2T9
Tel (தொலைபேசி): (416) 531-0778
Fax (தொலைநகல்): (416) 533-0107
E-mail (மின் அஞ்சல்): info@workersactioncentre.org
http://www.workersactioncentre.org